T2-மின்னியலும் வெப்பவியலும்
மாதிரி வினாத்தாள் VI

8th Standard

Reg.No. : | | | | | | |

**அறிவியல்**

# I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 01:15:00 Hrs

Total Marks : 30

## பகுதி - அ

5 x 1 = 5

1) மின்முலாம் பூசப்படவேண்டிய பொருள் ______ மின்வாயாகச் செயல்படும்.
(a) எதிர்மின்வாய் (b) நேர்மின்வாய் (c) எதிர் மற்றும் நேர் மின்வாய் (d) எதுவுமில்லை

2) அதிக எலக்ட்ரான்களைப் பெற்ற ஒரு பொருள் _________
(a) நேர்மின்னூட்டம் உடையது (b) மின்மின்னூட்டம் அற்றது (c) எதிர் மின்னூட்டம் உடையது
(d) நேர் மற்றும் எதிர் மின்னூட்டம் உடையது

3) தொடுவதின் மூலம் ஒரு பொருளை மின்னூட்டமடையச் செய்யும் முறை ________
(a) கடத்துதல் (b) உராய்வின் மூலம் மின்னூட்டம் அடையச் செய்தல் (c) தூண்டுதல் (d) இவை அனைத்தும்

4) மின்னூட்டம் பெற்ற ஒரு மேகத்தின் அடிப்பகுதி பொதுவாக ______ பெற்றிருக்கும்.
(a) நேர்மின்னூட்டம் (b) எதிர் மின்னூட்டம் (c) காற்று (d) மின்னூட்டம் இல்லை

5) ஒரு பொருளின் வெப்பம் அல்லது குளிர்ச்சியின் அளவு ________ எனப்படும்.
(a) வெப்பநிலை (b) குளிர்ச்சி (c) வெப்பநிலை மானி (d) வெப்பம்

## பகுதி - ஆ

5 x 1 = 5

6) கரைசல்களின் வழியே மின்னோட்டம் பாயும்போது ________ மாற்றத்தை ஏற்படுத்துகிறது

7) மின்னூட்டங்களைக் கண்டறியவும், அளக்கவும் பயன்படும் கருவி _______

8) மின்னோட்டத்தைக் கடத்தும் திரவங்கள் அனைத்தும் _______ ,________ , மற்றும் ________ கரைசல்களாகவே உள்ளன.

9) பொருள்களை வெப்பப்படுத்தும் போது அவற்றின் ________ உயருகிறது.

10) வெப்பம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எவ்வித பருப்பொருள் ஊடகமும் இன்றி பரவும் முறைக்கு என்று பெயர்

## பகுதி - இ

5 x 1 = 5

11) ஒரு தொடரிணைப்புச் சுற்றில் ஏதோனுமொரு மின்விளக்கு எடுக்கப்பட்டால் மற்ற மின்விளக்குகள் தொடர்ந்து ஒளிரும்.

12) தம் வழியே மின்னோட்டம் பாய அனுமதிக்கும் பொருள்கள் மின் கடத்தாப் பொருள்கள் எனப்படும்.

13) மின்கலத்தொகுப்பின் எதிர்மின்முனையோடு இணைக்கப்படும் தகடு நேர்மின்வாய் எனப்படும்.

14) மின்னல் ஏற்படும் போது திறந்த வெளிகளில் ஓடலாம்.

15) திரவங்களை விட திடப்பொருள்கள் அதிகமாக விரிவடையும்.

## பகுதி - ஈ

5 x 3 = 15

16) தூய நீர் மின்சாரத்தைக் கடத்துமா? இல்லை எனில் அது மின்சாரத்தைக் கடத்த என்ன செய்ய வேண்டும்?

17) பிரேம் ஒரு இரும்பு நாற்காலியின் மீது ஏறி நின்று கொண்டு, தனது வீட்டில் மின்னிழை உருகிய ஒரு பல்புக்குப் பதிலாகப் புதிய பல்பு ஒன்றைப் பொருத்திக் கொண்டிருந்தான். அவனுடைய அப்பா அவனை இரும்பு நாற்காலிக்குப் பதிலாக மர நாற்காலியைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார். ஏன்?

18) மின்னோட்டத்தைக் கடத்துதல் என்ற பண்பை அடிப்படையாகக் கொண்டு, பொருந்தாத ஒன்றை வட்டமிடுக.
அ) வெள்ளி, பிளாட்டினம், சோடியம், மரம்
ஆ) பிளாஸ்டிக், தீக்குச்சி, காகிதம், ஊசி
இ) உப்புக்கரைசல், தூயநீர், எலுமிச்சை சாறு, ஹைட்ரோகுளோரிக் அமிலம்

19) சுவேதா ஒரு பிளாஸ்டிக் அளவுகோலால் தனது தலைமுடியைத் தேய்த்து விட்டு சிறு காகிதத்துண்டுகளுக்கு அருகில் கொண்டு சென்றபோது, காகிதத் துண்டுகள் அளவுகோலால் ஈர்க்கப்பட்டன. ஆனால் கீதா இதே நிகழ்ச்சியை ஒரு உலோகத்தால் ஆன அளவுகோலைக் கொண்டு செய்தபோது காகிதத் துண்டுகள் ஈர்க்கப்படவில்லை. ஏன்? என விளக்குக.

20) அது மிகக் குளிரான பனிக்காலம், கீதா அதிகாலையில் எழுந்து நடைப்பயிற்சி மேற்கொண்டிருந்தபோது சிலர் சாலையோரத்தில் சுள்ளிகளை எரிய விட்டு அதைச் சுற்றி அமர்ந்து இருப்பதைக் கண்டாள். ஏன் அவர்கள் அவ்வாறு அமர்ந்துள்ளனர்? வெப்பம் எம்முறையில் இங்குக்கடத்தப்படுகிறது?

*****************************************